NO FAME

NO NAME

NO SELF INTEREST

ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



"ஹரே ராம..." மஹாமந்திர
நகர்வல நாமசங்கீர்த்தனம்
இடம்: ஆம்பூர், தேதி : 29.10.2006

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"


| வேணு : 12 | டிசம்பர்– 2006 | கானம் : 5 |
|---|---|---|

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி :

ஆம்பூர்
ஆன்மீக பேரவை
சார்பில்
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
ஜயந்தி
மஹோத்ஸவம்
நகர்வல
நாமசங்கீர்த்தனம்



இடம்: அருள்மிகு ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில், ஆம்பூர்
தேதி :23.10.2006



"ஹரே ராம..."
மஹாமந்திர
நகர்வல
நாமசங்கீர்த்தனம்

நகர்வல
நாமசங்கீர்த்தனத்தில்
பூ மழை தூவி
பக்தர்களின்
மகிழ்ச்சி



ஸ்ரீ ஹரி :

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் விஜயம்

இடம் : சிவகாசி

தேதி : 03.11..2006



ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை, மஹாமந்திர நாமகீர்த்தனம்,
இடம்: காரனேசன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி



"ஹரே ராம..."
மஹாமந்திர
நகர்வல
நாமசங்கீர்த்தனம்



இடம் : ஸ்ரீ சத்குரு யோகி ராம்சுரத்குமார் பஜன் மண்டலி, சிவகாசி

# மதுரமுரளி

Rs.10/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 12 | டிசம்பர்– 2006 | கானம் : 5 |
|---|---|---|


ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ ஸ்வாமிஜியின்**
**விஜயம்**

இடம் : தூத்துக்குடி
தேதி : 17.11..2006 முதல்
19.11..2006 வரை





"ஹரே ராம..." மஹாமந்திர
நகர்வல நாமசங்கீர்த்தனம்,
ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை,
இடம்: சிவன் கோவில்.

"ஹரே ராம..."
மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை
இடம்: தூத்துக்குடி நகராட்சி மண்டபம்




Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை


வேணு : 12 டிசம்பர் 2006 கானம் : 5


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 131 ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் ... | 4 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் ... | 6 |
| 5. | ஸ்ரீமத் பாகவத ரஸதுளிகள் ... | 8 |
| 6. | **பா**வலோகத்தில் ஒரு சஞ்சாரம் ... | 10 |
| 7. | ஸ்ரீ சங்கரர் நூல்களிலிருந்து ரஸானுபவங்கள் - 17 ... | 12 |
| 8. | **பா**லகர்களுக்கு ஒரு கதை - 104 ... | 14 |
| 9. | மாலே மணிவண்ணா - 47 ... | 18 |
| 10. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் ... | 21 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 129 ... | 24 |
| 12. | செய்திகள் ... | 27 |
| 13. | நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள் ... | 29 |


*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே |*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ||*

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

**"நீலமேகஶ்யாமளரூப கோபால" நாமாவளி மெட்டு**

1. ராம நாமம் சொல்வதே கலியில் கதியாம்!
அதையும் மறந்தால் அதோ கதியாம்!

2. ராம நாமம் சொல்ல சொல்ல நன்மை பெருகுமே!
-நாவும் இனிக்குமே!
பாமரன் முதல் பண்டிதன் வரை புனிதம் ஆக்குமே!

3. சிவனும் பார்வதியும் சொல்லும் நாமமாம்!
கவலையைப் போக்கி சாந்தி நல்குமாம்!

4. ராம நாமம் சொல்லி அனுமன் கடலைத் தாண்டினான்!
- மலையை தூக்கினான்!
மலை போன்ற துக்கமும் பனிபோல் விலகுமாம்!

5. ராம நாமம் சொல்லி சபரீ முக்தி எய்தினாள்!
நாமமும் நாமியும் வேறுவேறு இல்லவே இல்லையாம்!

6. ராம நாமம் சொல்வதற்கு எந்தத் தடையும் இல்லையாம்!
சொல்ல சொல்ல தடைகள் எல்லாம் தானே விலகுமாம்!

> The path of Jnana is challenging and adventuours. Because of that itself, only few can taste sucess in that path. But, the path of Bhakthi is lyrical & is full of beauty. That is why, it is recommended to all.
>
> \- Sri Sri Swamiji

## மதுரமான 131 நவனீயர்

எப்பொழுதும் நம் ஸ்வாமிஜி அவர்களுக்கு, யந்திரம், மந்திரம், ரக்ஷை, தாயத்து போன்ற விஷயங்களில் ஈடுபாடு கிடையாது. பக்தி போதும்; நாமா போதும் என்றுதான் இருப்பார்கள். நாம ஸங்கீர்த்தனத்திற்கு மிஞ்சியது ஒன்றும் இல்லை என்றுதான் இருப்பார்கள். 2004-ஆம் ஆண்டில் ஒரு ஸமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் மிகவும் அன்புகொண்ட ஒரு பெரியவர், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தாயத்தைக் கொடுத்து, ''இதைத் தாங்கள் கண்டிப்பாகக் கட்டிக்கொள்ள வேண்டும்'' என்று அன்பால் வற்புறுத்தினார். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களும், அந்தப் பெரியவருடைய வற்புறுத்தலைத் தட்ட முடியாமல், வேறு வழியில்லாமல் தாயத்தை கையில் கட்டிக்கொண்டார்கள்.

அன்று, சென்னையை அடுத்துள்ள செட்டிபுண்ணியம் என்ற கிராமத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி சென்றிருந்தார்கள். அங்கு, ஸ்ரீ ஹயக்ரீவர் கோவில் உள்ளது. ஸ்ரீ ஹயக்ரீவர் சன்னதிக்குப் பக்கத்திலேயே ஸ்ரீ ராமர் சன்னதி உள்ளது. அந்த அர்ச்சகர், ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியை ஸ்வாமிஜி அவர்களுக்கு தரிசனம் செய்து வைக்கும்பொழுது, ''எந்த ராமருக்கும் இல்லாத விசேஷம் இந்த ராமருக்கு உண்டு; அது என்னவென்றால், விஸ்வாமித்ரர் யக்ஞ ஸம்ரக்ஷணத்தை செய்யும் பொருட்டு ராமர், லக்ஷ்மணர்களை அழைத்துச் செல்லும் பொழுது, அவர்களுக்கு எந்த தோஷமும் படக்கூடாது என்பதற்காக மந்திரித்து காலில் தாயத்து கட்டியுள்ளார் என்று தாயத்துக் கட்டிய ஸ்ரீ ராமபிரானுடைய கால்களைக் காண்பித்தார்.

'இதைப் பார்த்தவுடன், ''விஸ்வாமித்திரர் பிரியத்துக்காக நானே தாயத்து கட்டிக்கொண்டுள்ளேன். நீயும் கட்டிக்கொண்டதில் தவறில்லை'' என்று ஸ்ரீ ராமபிரான் சொல்வதுபோல் இருந்தது' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி தன் அனுபவத்தைக் கூறினார்கள்.

(தொடரும்)

டாக்டர். ஆ. பாக்யநாதன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : அன்னதானம் மட்டும் எல்லா தானங்களைக் காட்டிலும் மிகவும் உயர்வாகக் கூறப்படுவதன் காரணம் என்ன?*

பதில் : நாம் ஒரு மோட்டார் வாகனம் வாங்கினால் அது கூட எந்தவித பழுதும் இல்லாமல் ஒருவருடம்கூட ஓடமாட்டேன் என்கின்றது. ஆனால், நம் உடலில் இரப்பை, இதயம், சிறுநீரகம், சுவாசப்பை போன்றவைகள் வருடக்கணக்காக நிற்காமல் ஓட வைத்திருக்கின்றான் இறைவன். மேலும், மனிதனுடைய சரீரமே ஒரு பெரிய அற்புதம். இவ்வளவு அற்புதமாகப் படைக்கத் தெரிந்த இறைவன், மனித உடல், எந்த உணவும் இல்லாமல் இயங்கும்படி படைத்திருக்க முடியாதா என்ன? ஏன் பசியைக் கொடுத்து உணவுத் தேவையை வைத்திருக்கின்றான் என்றால், மனிதனுடைய மனதில், மிகவும் அத்தியாவசியமான தேவையான உணவிற்கு ஒரு கஷ்டம் ஏற்படும்பொழுது, அதைப் போக்க வேண்டும் என்று இரக்கம் வருகின்றதா? என்பதைப் பார்ப்பதற்குத்தான். பசியால் வாடுபவனைப் பார்த்து இரக்கம் என்று ஒன்று வராவிட்டால் அவன் மனிதனாகப் பிறந்ததற்கும் பலன் ஒன்றும் இல்லை. ஆகவேதான், அன்னதானத்தினுடைய பெருமை எல்லோராலும் புகழ்ந்து பேசப்படுகின்றது.

*கேள்வி : மனிதப் பிறவியை அடைந்த ஒருவன் கீழான ஜீவராசி களின் பிறவியை ஏன் அடைகின்றான்?*

பதில் : ஒரு மனிதன் இறக்கும்பொழுது, சரீரம்தான் அழிகின்றதே தவிர, மனம் அழியவில்லை. ஒரு மனிதனின் மனநிலை பாதிக்கப் படும்பொழுது அவனுக்கு வேதனையை அளிக்கும் தேவை யில்லாத எண்ணங்கள் வந்து சித்திரவதை செய்கின்றன. அவனால், அதை நிறுத்த முடியவில்லை. அவன் மீண்டும் மனிதனாகப் பிறந்தால் அதே மனதுடன்தான் பிறப்பான். அதே வேதனையைத் தான் அடைவான். ஆனால், சிந்திக்கின்ற தன்மை குறைந்த, ஐந்தறிவுக்குக் குறைந்த ஒரு பிறவியை சிலகாலம் கொடுத்தால் அவனுடைய மனதிற்கு ஓய்வு கிடைக்கும். பிறகு, பல பிறவிகள் கழித்து மனிதப் பிறவி கொடுப்பது அவனுக்கு ஆரோக்கியமாக இருக்கும் என்பதை நினைத்தே பகவான் அப்படி கொடுக்கின்றான்.

*கேள்வி : கடவுளுடைய கருணையிலேயே எது உயர்ந்தது?*

*பதில்* : நாம் எந்த ஒரு நோக்கத்தின் பொருட்டு ஒரு காரியம் செய்கின்றோமோ அது நிறைவேறவில்லை என்றால் மீண்டும் அதைச் செய்ய ஆசைப்படமாட்டோம். அலுப்பு தட்டிவிடும்.

நாம் எல்லோரும் முக்தி அடைவதற்காகத்தானே இந்தப் பிரபஞ்சத்தின் இறைவன் படைத்துக் காத்து அழித்து அளவில்லாத லீலைகளை நடத்திவருகின்றான். அவனுடைய ஒவ்வொரு சிருஷ்டி யிலும் ஒரு சிலர் கூட முக்திக்கு ஆசைப்படாதவர்களாக இருந்தும் அவன் அலுத்துக்கொள்ளாமல் தன்னுடைய படைத்துக் காத்து அழிக்கும் தொழிலை விடாமல் செய்துகொண்டிருப்பதாலேயே அவன் பரம கருணை உள்ளவனாக இருக்கின்றான்.

***கேள்வி: க்ருஷ்ணன் சொன்ன கீதை அத்வைதமாக இருப்பதாக சங்கரரும், விசிஷ்டாத்வைதமாக இருப்பதாக ராமாநுஜரும் த்வைதமாக இருப்பதாக மத்வரும் கூறுகின்றார்களே?***

பதில் : நீ ஏன் க்ருஷ்ணர் சொன்ன கீதையைப் பற்றி மற்றவர்களின் அபிப்ராயங்களை அறிய முயலுகின்றாய். க்ருஷ்ணர் என்ன சொல்கின்றார் என்று பார். அவரே, ''பேசாமல் என்னுடைய நாமகீர்த்தனத்தை செய்துகொண்டிரு. மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கின்றேன்'' என்கின்றார்.

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்**
**மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை P.O.**

**தனுர்மாத பூஜை**

2006 டிசம்பர் 16-ஆம் தேதி முதல் 2007 ஜனவரி 14-ஆம் தேதி வரை, ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில், தினமும், காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.

தினசரி கட்டளை - ரூ. 200/-

**கோயில் தரிசன நேரம் :**

காலை 4.30 மணி முதல் காலை 9.30 மணி வரை

மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

01-01-2007 அன்று காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட ''ஹரே ராம....'' மஹா மந்திர நாமகீர்த்தனம் நடைபெறும். பக்தர்களின் சேவைக்காக அன்று பகல் முழுவதும் பெருமாள் ஸந்நிதி திறந்திருக்கும்.

# மாதம் ஒரு புத்தகம்

நம் ஸ்வாமிஜி அவர்கள், ‘‘நமது மதம் ஒரு முழுமையான மதம் (complete religion)" என்று அடிக்கடி சொல்வார்கள். அதற்கானக் காரணத்தை விவரிக்கையில், ‘‘எல்லோருக்கும் ஒரே வழி என்று காண்பிக்காமல், எழுத்தறிவில்லாதவர்கள் முதல் மெத்த படித்த பண்டிதர்கள்வரை, கடவுளை நம்பாதவர்கள் முதல் கடவுளை நம்புகின்றவர்கள்வரை எல்லோருக்கும் அவரவர்களின் மனப்பாங்கிற்கு ஏற்றார்போல் ஒரு வழியைக் காண்பித்து, மனித வாழ்வின் லட்சியமான இறைவனடிக்கு அழைத்துச் செல்வது நம் மதம் மட்டுமே! உயர்ந்த தத்துவ விஷயங்களையும், தூய பிரேம பக்தியையும் பற்றி பேசும் நம் மதத்தில்தான், கிராமத்து எல்லை தேவதைகள் பற்றியும் பேசப்பட்டுள்ளது. நம் மதத்தில் சொல்லப் பட்டுள்ள சிறிய விஷயங்கள்கூட, எந்தக் கோணத்திலிருந்து நோக்கினாலும் அர்த்தம் பொதிந்ததாகவே காட்சியளிக்கும். அதுதான் நமது மதத்தின் தனி அழகு’’ என்பார்கள்.

தினமும் நாம் இறைவழிபாட்டில் உபயோகிக்கும் தீபம், புஷ்பம், நறுமண புகை போன்றவற்றின் முக்கியத்துவத்தை விளக்கும் சம்பவத்தை ஸ்ரீ நாமானந்தகிரி ஸ்வாமிகள் எழுதியுள்ள ‘ஞானானுபவம்’ என்ற சுவையான நூலில் காண நேர்ந்தது.

‘‘திருக்கோவிலூர் தபோவனத்தில் தினமும் அதிகாலை 4.00 மணிக்கு தீபஜோதி வழிபாடு நடைபெறுவது வழக்கம். ஒரு சிறு பெண் குளித்து, அழகாக அலங்காரம் செய்துகொண்டு ஒரு தட்டில் பஞ்சமுக தீபத்துடன் முன் செல்ல, ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், பக்தர்கள் புடைசூழ, பின்தொடர்ந்து, ஆஸ்மரத்தை வலம் வருவார்கள். கூடவே ஒருவர், நறுமணம் மிகுந்த சாம்பிராணி புகை போட்டுக்கொண்டுவர, அந்த அதிகாலை, அருளும், ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமிகளின் சூரியனை ஒத்த திருமுக மண்டலமும், தீபத்தின் ஒளியும், ‘தீபஜோதியாய் வருவாய்’ என்ற மென்மையான பாடலும் அனைவரின் மனதையும் ஒருமுகப்படுத்திவிடும்.

ஒருநாள் நூலாசிரியர் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமியிடம், ''தீப ஜோதியின் தாத்பர்யம் (concept) என்ன?'' என்று கேட்டபொழுது, குருநாதர், ''தினமும் இரவு பூஜை முடிந்தபின், அனைத்து இறை சன்னதிகளும் மூடப்பட்டுவிடும். இந்த இருண்ட இரவு நேரமே துர்சக்திகளின் பகல். அவற்றின் நடமாட்டம் அப்பொழுது இருக்கும். மேலும், ஆஸ்ரமத்தில் தங்குபவர்கள், தேவையற்ற தீய எண்ணங்களிலோ, பேச்சுக்களிலோ, அல்லது ஆஸ்ரம தர்மத்திற்கு அப்பாற்பட்ட அனாசாரமான செயல்களிலோ ஈடுபட்டிருக்கலாம். இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் ஆஸ்ரம வளாகத்தின் புனிதம் களங்கப்படும் வாய்ப்புள்ளது. தீப ஒளியும், நறுமண புகையும், மலர்களின் வாசனையும், தெய்வீகமான பாடல்களும் தீய சக்திகளையும், தீய அதிர்வுகளையும் அகற்றிவிடும். இந்த நல்ல சூழ்நிலையில் நம் உள்ளத்தில் எண்ண அலைகள் சிதறாமல் மனம் கட்டுப்பட்டு இறையனுபவத்தில் ஈடுபட முடியும்'' என்று சுவையான விளக்கமளித்தார்கள்.

- ஆ. பாக்யநாதன்.

*Sri Hari :*

*Pranams to the Lotus feet of*

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# ஸ்ரீமத் பாகவத ரஸதுளிகள்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

➤ ஒரு மனிதன், சிறிய பாபம் செய்தால் அதன் பலனை ஜன்மாந்தரத்தில் தொடர்ந்து (வரும் பிறவிகளில்)அனுபவிப்பான். பெரிய பாபமாக செய்துவிட்டால் அதன் பலன் அந்த ஜன்மாவிலேயே வந்துவிடும். துந்துகாரி செய்தது மஹாபாபங்கள் என்பதால் அவன் எந்த தாசிகளுடன் வாழ்ந்தானோ அந்த தாசிகளே அவனை கொன்றுவிட்டார்கள் என்பது இதைத்தான் காட்டுகின்றது.

➤ துந்துகாரியின் ப்ரேத அவஸ்தையைப் போக்க, எழு கணுக்கள் உடைய ஒரு மூங்கில் கம்பை நட்டு, அதில் அந்த ப்ரேதத்தை ஆவாஹனம் செய்து, ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தை, கோகர்ணன் நடத்தினான். ஏழு நாட்களுக்குப் பிறகு அந்த கம்பு முழுவதுமாக வெடித்து துந்துகாரி வைகுண்டம் போனான் என்று சொல்லாமல், ஒவ்வொரு நாளும் ஒரு கணு வெடித்தது என்று கூறப்பட்டு இருக்கின்றது. இதிலிருந்து என்ன தெரிய வருகின்றது என்றால், ஒரு நாள் பாகவத பாராயணம் செய்தாலும், கேட்டாலும், அதற்கான பலன் கிடைக்கும் என்பதை உணர்த்துகின்றது.

➤ துருவனுடைய வம்சத்தில், பரம பாவியான வேணன் வருகின்றான்; ஹிரண்யகசிபுவிற்கு பரம பாகவதனான ப்ராஹ்லாதன் பிறக்கின்றான். நல்ல வம்சத்தில் கெட்டவர்களும், கெட்ட வம்சத்தில் நல்லவர்களும் வரக்கூடும் என்பதைத்தான் இது காட்டுகின்றது.

➤ ஹிரண்யகசிபு நின்றுகொண்டே தவம் செய்தான். அது அவனுக்கு கடினமல்ல. ஏனென்றால் ஜய, விஜயர்களாக வைகுண்டத்தில் நின்று நல்ல பழக்கம் உண்டு. ஆகவேதான் அவன் நின்றுகொண்டு வெகுகாலம் தவம் செய்தான்போலும்.

➤ நாரதர், துருவனுக்கு ஜபம் செய்ய வேண்டிய மந்திரம், தியானம் செய்யவேண்டிய உருவம், தியானம் செய்ய வேண்டிய இடம், பிராணாயாமம் இவற்றை பற்றி எல்லாம் சொன்னார்.

ஆனால், துருவன், கடுமையான ஆகார நியமங்களை கடைப் பிடிக்கின்றான். இதை நாரதர் சொல்லவில்லையே? என்று நமக்கு கேள்வி எழும். இதிலிருந்து, குருவானவர், சிலவற்றை வாக்கு மூலமாக உணர்த்துவார். சிலவற்றை மனதில் உள்ளிருந்து உணர்த்துவார் என்பது தெரிய வருகின்றது.

➤ பகவான் பாற்கடலை கடைந்தது தேவர்களுக்கு அமிர்தம் கொடுப்பதற்காக என்பது எல்லோருக்கும் தெரிந்தது. ஆனால், உண்மை என்னவென்றால் இலக்குமியை பாற்கடலிலிருந்து வெளிக்கொணர்ந்து தான் இலக்குமியை விவாஹம் செய்து கொள்வதற்காகவே பாற்கடலை கடைந்தான்போலும்!

➤ சிலர், மாமனார் வீட்டில் நிரந்தர மாப்பிள்ளைகளாக தங்கிவிடுவார்கள். பாற்கடலில் பள்ளிகொண்டு இந்த பழக்கத்தை பகவான்தான் ஆரம்பித்து வைத்தான்போலும்!

➤ தேவர்களிடமிருந்து அமிர்தத்தை அஸுரர்கள் பிடுங்கிச் செல்ல, பகவான் மோஹினி அலங்காரம் எடுத்துக்கொண்டு அஸுரர்களிடமிருந்து அந்த அமிர்தத்தை வாங்குவதற்காகச் செல்கின்றான். இவ்வளவு நாள் இல்லாமல் அன்றைக்கு ஏன் மோஹினி அலங்காரம் போட்டுக்கொண்டான்? பாற்கடலை கடைந்து இலக்குமியை பார்த்தவுடன் அவளது வடிவழகில் மயங்கி, தானும் அந்த வேஷம் தரித்துக்கொள்ள ஆசைப்பட்டான் போலும்!

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue,

Ashok Nagar, Chennai - 600 083

Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# பாவலோகத்தில் ஒரு ஸஞ்சாரம்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

பௌர்ணமி திதி ஆனதால், ஆகாயத்தில் வெள்ளி நிலவு; அந்த வெள்ளி நிலவின் கிரணங்கள் அழகாக யமுனையில் விழுகின்றது. அசைகின்ற அலைகளிலே அந்த ஒளி கிரணங்கள் பரந்து விழுந்திருப்பது மேலும் அழகாக இருந்தது. காற்று வீசிய படியே உள்ளது. ஞானிகள் மனதில் இருக்கும் அமைதியைப் போல், அங்கு நிலவும் அமைதியை குலைப்பதற்கு இயற்கைக்கும் விருப்பமில்லைபோலும். ராதையும் கண்ணனும் ஒருவருடைய தோள்மேல் மற்றொருவர் கைபோட்டுக்கொண்டு அமைதியாக யமுனை கரையோரமாக நடந்து வருகின்றார்கள். அப்பொழுது கரையோரம் நிறுத்தப்பட்டுள்ள அழகான படகைக் கண்டார்கள். அது அழகாக, அதே சமயத்தில், ஆடம்பரமில்லாமல் இருந்தது. நடுவில் அழகான மேடை போன்ற அமைப்பும் இருந்தது. இந்த சுகமான வேளையிலும் சூழலிலும் ராதை, படகு சவாரி செய்ய ஆசைப்பட்டாள்.

கண்ணனும், ராதையை படகில் அமர்த்தி துடுப்பை போட்டுகொண்டே போய்கொண்டிருந்தான். நேரம் போனதே தெரியவில்லை. ‘‘இவ்வளவு நேரமாக தனியாக துடுப்புகள் போடுகின்றானே கண்ணன், அவன் கை வலிக்குமோ?’’ என்று எண்ணிய ராதை, கண்ணனை தன் மடிமேல் தலை வைத்து படுக்க வைத்துக்கொண்டாள். கண்ணனுடைய நெற்றிப் பக்கம் இருக்கும் தலையை தன்னுடைய மிருதுவான கைகளால் தடவி அவனுடைய அழகான கேசங்களை வருடிவிட்டாள். கண்ணனும் படுத்தபடியே ஒரு கால் மீது ஒரு கால் போட்டுக்கொண்டு பாதி கண்களை மூடியபடி இருந்தான். இந்த நேரத்தில் பகவானால் சிருஷ்டி செய்யப்பட்ட ஐம்பூதங்களும் யுகளஸேவை செய்ய ஆசைப் பட்டன. ஆகாயமானது, அந்த ராகா சந்திரனை மேகங்கள் வந்து மூடாதபடி பார்த்துக்கொண்டது. துடுப்பு இல்லாமல் அந்த ஓடம் போவதற்காக யமுனை தன்னுடைய அலைகளால் தள்ளிவிட்டது. காற்று, படகை சரியான வழியில் அழைத்துச் சென்றது. பூமியோ

படகுகள் வரும் வழியெல்லாம், காலையில் மலர வேண்டிய மலர்களை எல்லாம் கூட இப்பொழுதே உதிரச் செய்து அந்த யுகளத்திற்கு சுகத்தைக் கொடுத்தது. அக்னியோ, அந்த காற்று குளிர்ந்த காற்றாக மட்டும் இருந்தால் நடுக்கம் ஏற்படும் என்று நினைத்து, தான் சிறிது காற்றில் கலந்து இதமான உஷ்ணத்துடன் வீசியது. இப்படி பகவானுடைய நௌகா லீலையில் பஞ்சபூதங்களும் பங்குகொண்டு யுகளத்திற்கு கைங்கர்யம் செய்து மகிழ்ச்சி அடைந்தன.

# ஸ்ரீ சங்கரர் நூல்களிலிருந்து ரஸானுபவங்கள் - 17

- குடந்தை என். இராமசர்மா

அத்வைத ஞானத்தையும் பக்தியையும் இணைக்க முடியாது; அத்வைத சித்தாந்தத்தில் பக்திக்கு ஏது இடம்? என்றெல்லாம் வாதங்கம் எழுந்த காலத்தில், ஞானவானின் அமுத தாரகை போல் வந்தவர் ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி; ஈச்வர ஸாக்ஷாத்காரம் பெற்ற மஹாயோகி. மிகச்சிறந்த கவி. பெரிய தார்க்கிகர். கற்கண்டிற்கும் இனிப்புக்கும் உள்ள தொடர்பு போன்றது பக்திக்கும் அத்வைதத்திற்கும் உள்ள தொடர்பு என்று நிறுவினார்.

இவரது பெருமைக்கு ஒரு சான்று - ஒரு சமயம், 'துளஸி தாஸர்' ராமாயணத்தை ஸம்ஸ்கிருத பாஷையில் காவியமாக எழுத விரும்பினார். ஆனால், சக்கரவர்த்தித் திருமகனோ பரமேஸ்வரன் மூலம் தேசபாஷையில் ஹிந்தியில், எழுதும்படி உத்தரவளித்தார். பரமனின் விருப்பப்படி 'ராமசரிதமானஸ்' எழுதினார். வெளியிட வேண்டும். யாரேனும் மஹான்களின் ஸ்ரீமுகம் பெற்று வெளியிட ஆசை. அன்பர்கள் வேறு தாஸரை அணுகி விரைவில் வெளியிடக் கோரினர்.

அப்போது, காசியில் இருக்கும் ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதியிடம் சென்று ஸ்ரீமுகம் வாங்கி வெளியிடலாம் என்று ராமன் ஆணையிட்டான். தாஸரும் அதையே விரும்பினார். அன்பர்கள் நூலை எடுத்துச் சென்றனர்.

ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி அதைப் பலமுறை படித்தார், லயித்தார். ஒவ்வொரு அக்ஷரத்திலும் ராமன் முகம் தெரிகிறது என்று சொல்லிப் பாராட்டி ஸ்ரீ முகம் கொடுத்தார். காசி நகரின் கங்கைக் கரை முழுவதையும் இஸ்லாமியர்களின் ஆக்ரமிப்பிலிருந்து அக்பர் துணைகொண்டு மீட்டார். 'நாகா ஸந்யாஸிகள்' என்ற குழுவைத் துவக்கி ஸாதுக்களைச் காத்தார். இவர் ஸ்ரீமத் பகவத்கீதைக்கு, 'கூடார்த்த தீபிகா' (गूढार्थ दीपिका) என்ற ஒரு அற்புதமான உரை

எழுதியுள்ளார். ஸ்வதந்திரமான வியாக்யானம். அதில் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ சங்கரரின் கவித்துவத்திற்கும் வாக்கு வன்மைக்கும் இவரது கூற்றே சிறந்த சான்றாக அமைகிறது.

भगवत्पाद भाष्यार्थमालोच्यातिप्रयत्नतः ।

प्रायः प्रत्यक्षरं कुर्वे गीतागूढार्थदीपिकाम् ॥

*''பகவத்பாத பாஷ்யார்த்தம்*
*ஆலோச்ய அதிப்ரயத்நத: ।*
*ப்ராய: ப்ரத்யக்ஷரம்குர்வே*
*கீதா கூடார்த்த தீபிகாம் ॥*

''ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் கீதா பாஷ்யத்தை மிகுந்த முயற்சியோடு பல முறை படித்து, அதன் உட்பொருளை நன்றாகக் கிரஹித்துக் கொண்டபின் எனது இந்த கூடார்த்த தீபிகா எனும் சொந்த உரையை எழுதத் துவங்குகிறேன். மறைபொருளை விளக்கும் உரையாதலால் பெரும்பாலும் ஒவ்வொரு சொல்லிற்கும் விளக்கம் அளிக்கிறேன்'' என்கின்றார்.

ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதியே ஸ்ரீ சாங்கர ரஸத்தில் மயங்குகிறார் என்றால், நாம் எம்மாத்திரம்? இந்த கருத்தை ஸ்ரீதர ஸ்வாமியும் மற்ற பல உரையாசிரியர்களும் கூடச் சொல்கின்றனர். ஸ்ரீ சங்கரரின் வார்த்தைகளைக்கொண்டே பக்தியின் பரிணாமமே அத்விதீய ஞானம் என்று நிறுவுகிறார்.

தெளிந்த நீரில் கீழுள்ள தளம் தெரிந்தபோதிலும் கூட அதன் ஆழத்தைக் கணக்கிட்டுவிட முடியாது. அதுபோன்ற தெளிந்த நல் பாஷையாயிருந்த போதிலும் ஆச்சாரியரின் கருத்தாழம் தீர்மானிக்கப்பட முடிவதில்லை.

... வளரும்

# பாலகர்களுக்கு ஒரு கதை

ஒரு தனவந்தன், தமிழ்நாட்டில், பேசக்கூடிய கிளிகள் இருக்கக்கூடிய மாந்தோப்பிற்குச் சென்றான். அந்தக் கிளிகள் அதிசயமான கிளிகள், பேசக்கூடிய கிளிகள். எப்படியோ அவன் முயன்று அதில் ஒரு கிளியைப் பிடித்துவிட்டான். நமது நாட்டின் தலைநகரான டில்லியில் அவனுக்கு பெரிய வீடு இருக்கின்றது. எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. அந்தக் கிளியைப் பார்த்து, ''நீ மாந்தோப்பிலே தவழ்ந்து வருகின்றாயே! இந்த மாந்தோப்பைவிட பலவிதத்திலும் வசதியானது எனது வீடு, பார்ப்பதற்கு கோட்டை போல் இருக்கும். அரண்மனைபோல் இருக்கும். அந்த வீட்டிலே ஒரு தங்கக்கூண்டு செய்து அந்தத் தங்கக் கூண்டிலே உன்னை வைக்கின்றேன். நீ பழம் கேட்கின்றாயா! பால் கேட்கின்றாயா! நீ என்ன வேண்டுமானாலும் சாப்பிடலாம், இனிமையான பாடல்களையெல்லாம் நான் போட்டுக் காண்பிக்கின்றேன். நீ கேட்கலாம், அங்கு நடனம் நடக்கும். அந்த நடன நிகழ்ச்சியையும் நீ பார்க்கலாம். நீ எது கேட்டாலும் அங்கு உனக்கு அது கிடைக்கும்!'' என்றான்.

அந்தக் கிளி அவனிடம் சொன்னது, ''ஒருவனுக்கு சுதந்திரத்தைக் காட்டிலும் பெரிய செல்வம் என்ன இருக்கின்றது. சுகம் என்ன இருக்கின்றது. அந்த சுதந்திரம்தான் எனக்கு வேண்டும்!'' என்றது. சுதந்திரத்தைப்பற்றி கிளி மேலும் பேசியது. ''நீ என்னைக் கொண்டு போய் கோட்டைபோல் இருக்கக்கூடிய அரண்மனை போல் இருக்கக்கூடிய வீட்டில் வைத்தால்தான் என்ன? நாட்டியம் தான் ஆடினால்என்ன? நான் சுதந்திரமாக சிறகை விரித்து இந்த மாந்தோப்பிலே ஆகாசத்திலே பறப்பதுபோல் இருக்குமா? என்னை விட்டுவிடு. நீ உண்மையிலேயே நீ எனக்கு உதவி செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டால், நீ என்னை விட்டுவிடு. நான் சுதந்திரமாகப் பறக்கின்றேன்'' என்று அந்தக் கிளி சொன்னது.

இவனோ கேட்கவில்லை. அந்தக் கிளியை அழைத்துக்

கொண்டுவந்து, ''உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. மிகவும் அழகாக பேசுகின்றாய். பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றாய். கிளி கொஞ்சுவது போல் என்று சொல்வார்கள். அதுபோல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறாய். என்னுடைய வீட்டில் நீ கட்டாயம் அலங்கரிக்க வேண்டும்'' என்று பிடிவாதமாக அந்தக் கிளியை எடுத்துக்கொண்டு டில்லிக்குச் சென்று அரண்மனை போல் இருக்கக்கூடிய தன் வீட்டில் தங்கத்தினால் ஒரு கூண்டை செய்து அந்தக் கூண்டிலே கிளியை வைத்துவிட்டான்.

அது அந்த தங்கக் கூண்டிலே இருந்தது. பால் கொடுத்தான், பழம் கொடுத்தான். ஆனால் அந்தக் கிளிக்கு அதில் மனம் செல்லவில்லை. மனமெல்லாம் மற்ற கிளிகள் பற்றிய சிந்தனை. மாந்தோப்பில் இருக்கும்பொழுது, அந்தக் கிளியினுடைய மனைவி, அதன் குழந்தை, அதன் நண்பர்கள், அதன் சுற்றத்தார்கள் கூட இருந்தார்கள். ''இவர்கள் எல்லோரும் இப்பொழுது எப்படி இருப்பார்களோ?'' என்று கவலைப்பட்டது. ''அவர்களெல்லாம் சுதந்திரமாக வானத்திலே பறந்துகொண்டிருக்கும்பொழுது, நான் மட்டும் இந்தக் கூண்டிலே அகப்பட்டுக் கொண்டுவிட்டேனே. என் தலைவிதி இப்படியாகிவிட்டதே'' என்று கிளி எப்பொழுதும் மனதில் வேதனை பட்டுக்கொண்டு இருக்கும்.

ஒருநாள் அந்த செல்வந்தன், டில்லியிலிருந்து மீண்டும் தமிழ்நாட்டிற்கு ஒரு வேலைக்காகப் புறப்பட இருந்தான். அப்பொழுது அந்தக் கிளியைப் பார்த்து, ''நான் மீண்டும் தமிழ்நாட்டிற்குச் செல்கின்றேன். எந்த இடத்திலிருந்து நான் உன்னைப் பிடித்து வந்தேனோ அங்கும் செல்லப் போகின்றேன். உன்னுடைய மனைவி, குழந்தைகள், சுற்றத்தார்கள் முதலிய கிளிகளை நான் பார்க்க நேரிடலாம். அவர்களுக்கு எல்லாம் நீ ஏதாவது செய்தி சொல்ல நினைக்கின்றாயா, நீ அதை சொன்னால் அவர்களுக்குச் சென்று தெரிவிப்பேன்'' என்று சொன்னான்.

அந்தக் கிளி அவனிடம், ''நீ அவர்களைப் பார்க்கச் செல்லப்போகின்றாய் அல்லவா? அதை நினைக்கும்பொழுதே எனக்கு சந்தோஷமாக இருக்கின்றது. என்னையும் அழைத்துச் செல்லேன். நான் உன் கூட வருகின்றேன். என்னை பறக்க

விட்டுவிடு. மீண்டும் அவர்களுடன் சேர்த்துவிட்டு விடு'' என்று எவ்வளவோ கெஞ்சியது. அவனோ கிளியிடம், ''அதை மட்டும் கேட்காதே! நான் உன்னை அழைத்துச் செல்லப்போவதும் இல்லை. உன்னை பறக்க விடப்போதும் இல்லை. நீ இந்த மாளிகையில் இருப்பது, இந்த மாளிகைக்கு அழகு கூட்டுவதுபோல் இருக்கின்றது. நீ இங்குதான் இருக்கவேண்டும்'' என்றான். உடனே அந்த கிளி சொன்னது, ''அவர்கள் எல்லாரும் எப்படி இருக்கின்றார்கள் என்று தெரிந்துகொண்டு வா. அதே சமயத்தில், அவர்கள் ஏதாவது செய்தி சொல்கின்றார்களோ அந்தச் செய்தியையும் கேட்டுக் கொண்டு வா'' என்று அவனிடம் சொன்னது.

அவன் தமிழ்நாட்டிற்கு வந்தான். தன்னுடைய வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு அந்தக் கிளியை எந்த மாந்தோப்பிலே பிடித்தானோ அந்த மாந்தோப்பிற்குச் சென்றான். இந்த கிளியினுடைய சுற்றத்தாரையும் நண்பர்களையும், குடும்பத்தாரையும் கண்டான். இவனைப் பார்த்ததும் இந்த கிளிகள் எல்லாம் பயந்தன. எங்காவது தன்னையும் பிடித்துச்சென்று விடுவானோ? என்ற பயம். அவைகளைப் பார்த்துச் சொன்னான். ''உங்களைப் பிடிப்பதற்காக வரவில்லை. உங்களிடமிருந்து ஒரு கிளியை பிடித்துச் சென்றேனே, அந்தக் கிளி உங்களையெல்லாம் பார்த்து, அந்த கிளிக்கு நீங்கள் ஏதாவது தகவல் சொல்வதாக இருந்தால், அதைக் கேட்டு வரச்சொன்னது. அதற்காக வந்தேன்'' என்றான்.

இதைக் கேட்டவுடன் என்ன ஆயிற்று என்றால் இரண்டு மூன்று கிளிகள் பொத்தென்று மரக்கிளைகளிலிருந்து கீழே விழுந்து மூர்ச்சித்தன. அதைப் பார்த்த இவன், 'இந்தக் கிளிகள் எல்லாம், நாம் பிடித்துச் சென்ற கிளிமேல் உள்ள அன்பினால் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதும் உயிரை விட்டுவிட்டனவே! என்னே அதன் அன்பு' என்று நினைத்தான். மேலும், ''அந்தக் கிளியோ, செய்திகளை கேட்டுவரச் சொன்னது. இவைகளோ, செய்திகள் எதையும் சொல்லவில்லை. இவைகளின் துக்கச் செய்தியை நான் எப்படி போய் சொல்வேன். இருந்தாலும் பொய் சொல்லக்கூடாது. உண்மையைச் சொல்லிவிட வேண்டும்'' என்று நினைத்துத் திரும்பி, ஊருக்குச்

சென்று, தன் வீட்டிற்குச் சென்று, தங்கக் கூண்டில் உள்ள கிளியைப் பார்த்து, ''நீ சொன்னது போல் உனது சுற்றத்தார்களைப் பார்ப்பதற்கு அந்த மாந்தோப்பிற்குச் சென்றேன். அந்த கிளிகளைப் பார்த்தேன். நீ சொன்ன விஷயத்தைத் தெரிவித்தேன். அதில் இரண்டு மூன்று கிளிகள் உனக்கு மிகவும் வேண்டியவர்கள் என்று நினைக்கின்றேன். அவைகள் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டதும், பொத் பொத்தென்று கீழே விழுந்து உயிரை விட்டுவிட்டன. அவைகள் வேறு எந்த செய்தியும் உனக்குச் சொல்லவில்லை'' என்று சொன்னான்.

அதைக் கேட்டதும், அந்த கிளியும் கூண்டில் பொத்தென்று கீழே விழுந்தது, உடலை கீழே சாய்த்தது. இதைப் பார்த்தவுடன், ''நாம் ஆசையாக வளர்த்த கிளியும் இறந்துவிட்டதே!'' என்று வருத்தப்பட்டு, கூண்டைத் திறந்து, உணர்வின்றி இருக்கும் அந்த கிளியை எடுத்து மாடியிலே வைத்தான். அவ்வாறு மாடியில் வைத்ததுதான் தாமதம். உடனே, அப்படியே பறந்து சென்று விட்டது. அந்த கிளிகள் உண்மையிலே செய்தியை சொல்லி அனுப்பியிருக்கின்றன. வாயினால் பேசவில்லை. என்ன செய்தி சொல்லியிருக்கின்றன? ''உனக்கு விடுதலை வேண்டும் என்றால் இறந்தவன் போல் நடி, அப்படி நடித்தாயானால், உன்னை எடுத்து வெளியில் விட்டு விடுவான். நீ பறந்து வந்து என்னுடன் சேர்ந்துவிடு'' என்ற செய்தியை சொல்லாமல் சொல்லியிருக்கின்றன அல்லவா! வாய்திறந்து சொல்வதைக் காட்டிலும் சொல்லாமல் சொல்வதுதான் உயர்ந்த உபதேசம் அல்லவா!

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் நவம்பர் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# மாலே மணிவண்ணா - 47

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்.

பகவான் தன்னுடைய பாதுகாப்பில் உள்ள உயிர்களை எப்பொழுதும் இடையறாமல் நினைத்துக்கொண்டிருக்கிறான் என்று முன்னைய தோத்திரம் சொல்லியது.

அழியும் தன்மையுடையதாகிய பிறவியைப் பெற்று, இறந்தும் பிறந்தும் நிலைப்பேறில்லாது வாழும் உயிர்கள் புகலாக (அடைக்கலமாக) அடைவதற்குரியவன் அல்லவா பகவான்! அவனும், உயிர்களைப் போலவே பிறந்தும் இறந்தும் நிலைப் பேறில்லாதவனாக இருந்தால் அவன் எப்படி உயிர்களுக்கு அடைக்கலம் தர இயலும் என்று ஐயம் எழும் அல்லவா!

ஆகையால், அழிகின்றவன் ஆசை இல்லாதவனைச் சென்று தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியுமே அல்லாமல் ஆசை உடையவனிடத்தில் போய் எதை நிறைவேற்றிக் கொள்ள இயலும் - பகவானுக்கு எந்தத் தேவையும் இல்லை. எல்லாவற்றிலும் நிரம்பியவன்; எதிலும் ஆசையில்லாதவன். ஆதலின் வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தரக்கூடியவன்.

ஒரு காலத்திலிருந்து ஒரு காலத்து இல்லாமல் போகக் கூடியவன் அவன். எக்காலத்தும் அழியாமல் (மறையாமல்) நிலைப்பேறுடையவன். ஆகையால், யார் எப்பொழுது எந்நிலையில் எந்தக் காலத்தில் எதைக்கேட்டாலும் அப்பொழுதே அவர்களுக்கு அதைக் கொடுத்து நிறைவு செய்யக் கூடியவனாக நிலைப் பேறுடையவனாக இருக்கிறான் என்பதை அடுத்த தோத்திரம் உணர்த்துகிறது.

''மாயா மன்ன!'' என்பது, ''மாயாத மன்னும் நிலை உடையவனே!'' என்று பகவானை அழைக்கின்றது. பகவான், மாய்ந்து போகும் உயிர்களைப் போல இருப்பவன் அல்லன். அவன் மாயாதவன்; நிலைப்பேறில்லாமல் இறந்தும் பிறந்தும் தடம் மாறுகிற உயிர்களைப்போல இல்லாமல் என்றும் ஒரு படித்தாக நிலைப்பேறுடையவன் என்பதை இந்தத் தோத்திரம் சொல்கிறது.

இனி இம் ''மாயா மன்ன!'' என்ற தோத்திரத்துக்கு வேறு ஒரு சிறந்த பொருளும் உண்டு. மாயையில் நிலைபெற்றவனே, 'மாயா'

என்னும் வடசொல் தமிழ்முறைப்படி 'மாயை' என் ஐயிறு ஆகும். 'மன்ன' என்றால் மன்னுதல் உடையவனே அதாவது நிலைபெறுதல் உடையவனே என்பதாகும். மாயையில் நிலைபெறுதல் உடையவனே என்று பொருள். மாயன் என்பது அவனுக்கு ஒரு பெயர். ''மா மாயன் மாதவன் வைகுந்தன்'' என்று இப்பெயரை இன்னும் அழுத்தமாக ஆண்டாள் 'மா மாயன்' என்று அழைக்கிறார்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் 170 வது மந்திரம். 'மஹா மாய:' என்பதாகும். பெருமாயை உள்ளவர் உண்மை நிலையை அறியமுடியாதபடி உயிர்களை மயக்குவது மாயை. இதனை நம்மாழ்வார்,

***''ஒத்தார் மிக்காரை இளையாய மா மாயா''***

என்று அழைத்து, (திருவாய்: 2:3:2)

''அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்'' என்று சொல்லித் தலைக்கட்டினார். தான் மாயனாக இருப்பதோடல்லாமல் ஆருயிர்களையும் தன்னையும் தலைவனையும் அறியாத மாமாயத்தில் வைத்திருப்பவன் அவன் என்றும் ஆழ்வார் சொல்கிறார்.

இருப்பதை இல்லாததாக, இல்லாததை இருப்பதாக ஒன்றை வேறொன்றாக, பொருந்தாததைப் பொருந்துவதாகக் காட்டுவது மாயை. இந்த மாயையை சித்தி செய்து அதனால் பிறரை மயக்கி வசப்படுத்துகிற சிறந்த மாயாவிகளை மயக்கும் மஹாமாயையைக் கொண்டவர் பகவான். தானே மாயனாக இருப்பதால் தன்னைக் காணும் ஆர்வத்தைப் பக்தனிடத்தே மேலும் எழுப்ப இயல்கிறது. ஒன்றை மறைக்க மறைக்க அதனைக் காணும் விருப்பம் அதிகமாகும். தன்னை மாயனாகச் செய்துகொண்டு தன்னைக் காணும் ஆவலைப் பக்தனிடம் அதிகரிக்கச் செய்கிறார் பகவான்.

கம்சனாலும், அவனால் அனுப்பப் பெற்றவர்களாலும் செய்யப்பெற்ற வஞ்சனைகள், மாயங்கள் எல்லாவற்றையும் கிருஷ்ணன் தன் மாயையால் ஒன்றும் இல்லாதபடி ஆக்கிய சரித்திரத்தைப் ஸ்ரீமத் பாகவதத்தில் காணலாம்.

பகவானுடைய மாயா சாமார்த்தியத்தை உணராமல் பிரம்மதேவன் பசு, கன்று மேய்க்கும் இடையர் அத்தனையையும்

அடியோடு மறைத்துவிட்டபொழுது, உலகைப் படைப்போனும் தானே என்றுணர்த்த ஆணுமாய் ஆண் கன்றுமாகி அவற்றை மேய்ப்பானுமாய் நின்ற பரஞ்சோதி அல்லவா அவன். தேவ மானத்தாலே ஒருநாள், பூவுலகில் ஓராண்டுக்காலம் பசுவும், கன்றும், இடையர்களும் ஆக மாயையால் தன்னையே செய்து, பிரம்மனைத் திணற அடித்துவிட்டான் பகவான். பிரம்மன் பகவானை எளிமையாகக் கருதிய தன் தவற்றை உணர்ந்து சரணடைந்த கதையைப் பாகவதம் சொல்கிறது.

அவதார சீலத்தில் கூட, பகவான் தானே தன்னிடத்துள்ள மாயைக்குள்ளே தன்னை மறைத்துக்கொண்டு சாமானிய மக்களைப் போல் இன்ப துன்ப நுகர்ச்சியில் தடுமாறுகின்ற நிலைக்குத் தன்னைச் செய்துகொள்ளுகிற சீலகுணத்தை இராமாவதாரத்தில் கண்டுகளிக்கிறோம் அல்லவா? இவ்வாறு பகவானுடைய மாயை உயிர்களை மயக்குகிறது. உயிர்களுக்குத் துன்பம் செய்கிற அசுரர்களை மயக்கி அழிக்கிறது. உயிர்களோடு ஒன்றாக உறவாடுகிற பொழுது பகவானையே மாயை மயக்கிவிடுகிறது. இவ்வாறு மாயையை உயிர்களுக்குத் தன் திருவடியை அருளும் பயன்கருதி ஆள்பவன். ஆகையால் அவன் 'மாயாமன்ன'னாகிறான். மாயையில் நிலைப்பேறுடையவன் என்றும் மாயைக்கு மன்னன் என்றும் இருபொருள்படும்படி இத்தோத்திரம் அமைந்து இத்தோத்திரமும் நமக்கு மாயம் செய்கிறது.

(தொடரும்)

**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** :

(5 வரிகள் / 40 வார்த்தைகள்)
¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ''மதுரமுரளி'',
குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

மூவுலகிலும் உள்ள அனைத்து இடங்களும் பகவானுக்கே சொந்தமாயினும், பகவானுக்கு வ்ரஜபூமியில் உள்ள ப்ரேமை வேறு எதிலும் இல்லை. நந்தலாலா, வ்ரஜ பூமியில் எப்பொழுதும் விளையாடிக்கொண்டேதான் இருக்கின்றான். ஆனாலும், பகவானுடைய மற்ற ரூபங்களும் இங்கே வந்து தங்குவதற்கு விரும்புகின்றனர் என்பதே வ்ரஜபூமியின் பெருமயை நமக்கு நன்கு விளக்குகின்றது.

இருநூறு வருடங்களுக்குமுன் பூரியிலுள்ள ஜகன்னாத பெருமாளுக்கும் இவ்வாசை உண்டானது. ப்ருந்தாவனத்தில், யமுனைக் கரையில் வசிக்கவேண்டும் என்ற தன் ஆசையை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், ப்ருந்தாவனம் செல்வது எப்படி? ஸர்வ ஸமர்த்தராயிருந்தபோதிலும், ஸ்ரீ விக்ரஹத்தில் அவர் தன் பக்தர்களுக்கு அதீனமாகவே உள்ளார் அல்லவா? பக்தர்கள், அவரை எங்கே எப்படி வைத்தாலும், அப்படியே மகிழ்வதற்காகவே அவர் அர்ச்சா விக்ரஹத்தில் குடிகொண்டுள்ளார் அல்லவா! இந்த ரூபத்தில், பகவான் தன் ஆசைகளை பக்தர்களின் உதவியுடனே நிறைவேற்றிக்கொள்கிறார். ப்ருந்தாவனத்திற்குச் செல்லவேண்டுமானாலும், அங்கு யாராவது அவருக்கு ஸேவை செய்ய சித்தமாயிருந்தால்தானே செல்ல முடியும்? பகவான் அப்படி ஒரு பக்தரை தேடிக்கொண்டிருந்தார்.

ப்ருந்தாவனத்தில், ஸ்வாமி ராமானந்தர் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஹரிதாஸ் என்ற மஹாத்மா, யமுனைக் கரையில், தினமும் பஜனையில் ஈடுபட்டு வந்தார். இரவும், பகலும், பகவத் ஸ்மரணையில் மூழ்கி விரஹத்தில் துடித்தார். கடைசியில், பகவான் அவருக்கு தரிசனம் தந்தார். பகவானுடைய திவ்ய லாவண்யத்தைக் கண்டு ஹரிதாஸ் மூர்ச்சித்து விழுந்தார். பகவான், தன் கர கமலங்களை அவர் தலையில் வைத்து அவரை நினைவுக்குக் கொண்டுவந்தார். நினைவு திரும்பியதும் ஹரிதாஸ் தன் தலையை பகவானுடைய பாதத்தில் வைத்து வணங்கினார். பகவான்

தன்னுடைய அம்ருதமயமான குரலில் ''குழந்தாய்! நான் உன்னிடம் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். உன் ஸமீபத்திலேயே இருந்து உன்னுடைய கைங்கர்யத்தை அனுபவிக்க ஆவலாய் உள்ளேன். நீ இங்கிருந்து ஜகன்னாதபுரி செல். இந்த வருடத்து ஆஷாட மாதத்தில் என்னுடைய விக்ரஹம் மாற்றப்படும். நீ அந்த பழைய விக்ரஹத்தைக் கொண்டு இந்த இடத்திலேயே வைத்து அதில் எனக்கு ஸேவை செய்வாயாக'' என்றார்.

இதைக்கூறி பகவான் மறைந்துவிட்டார். ஹரிதாஸர், பகவானைக் காணாமல் துடித்தபோதிலும் அவருடைய ஆணையை நினைவில்கொண்டு தைரியத்தை இழக்காமல் இருந்தார். அவர் தன் சிஷ்யர்களுடன் கீர்த்தனம் செய்தவாரே ஜகன்னாத க்ஷேத்ரத்திற்குப் புறப்பட்டார். இரயில் வசதி இல்லாத அந்நாட்களில் காடுகளையும், மலைகளையும், நதிகளையும் நடந்தே கடந்து ஜகன்னாத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஜகன்னாதபுரியிலோ மஹா-மஹோத்ஸவமாக இருந்தது. இன்னும் நான்கே நாட்களில் பகவானுடைய திருமேனியை மாற்றும் உத்ஸவமும் மஹாபிஷேகமும் நடைபெறவிருந்தது. அதனால் புரியில் ஆனந்தவெள்ளம் பெருக்கெடுத்தது. ஹரிதாஸர், ஜகன்னாதருடைய புஜாரியிடம் தன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிவித்தார். அவர்கள் ''ஜகன்னாதருடைய பழைய விக்ரஹத்தைக் கொடுக்கும் அதிகாரம் எங்களுக்கு இல்லை. நீங்கள் இவ்விஷயமாக ராஜாவைத்தான் அணுகவேண்டும்'' என்று கூறிவிட்டார்கள். ஹரிதாஸர் ராஜாவிடம் சென்றார். அவருடைய தேஜோமயமான வடிவத்தைக் கண்ட ராஜா அவரை ஸாஷ்டாங்கமாக வணங்கி அவருடைய வருகைக்காண காரணத்தையும் கேட்டான். ஹரிதாஸர் பகவானுடைய ஆக்ஞையைத் தெரிவித்து ஜகன்னாதருடைய பழைய திருமேனியை தனக்கு அளிக்குமாறு வேண்டினார். ராஜாவோ - ''மஹராஜ்! உங்களுக்கு பகவான் ஆக்ஞை செய்தபோதிலும் எனக்கு அப்படி ஒரு ஆக்ஞையும் இல்லை. ஆதலால், நான் ஸம்ப்ரதாயமாக வரும் பழக்கத்தையே செய்யக் கடமைப்பட்டு உள்ளேன். எப்பொழுதும் ஜகன்னாதருடைய பழைய திருமேனியை ஸமுத்ரத்தில் விட்டுவிடுவதே வழக்கம். இம்முறையும் அவ்வாறே

நடக்கும். உங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாத என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும்'' என்று கூறிவிட்டான். ஹரிதாஸர், ''ஸ்ரீ விக்ரஹத்தை ஸமுத்ரத்தில் விட்டுவிடும் பக்ஷத்தில், அதே க்ஷணத்தில் நானும் என் சரீரத்தை அவருடனே ஸமுத்ரத்தில் விட்டுவிடுகிறேன்'' - என்று கூறி அன்ன-பானங்களை தியாகம் செய்து ஸமுத்ரக் கரையில் ப்ரஶாந்த சித்தத்துடன் பகவத் தியானத்தில் அமர்ந்தார்.

நள்ளிரவில், உறங்கிக்கொண்டிருந்த மன்னனின் கனவில் பகவான் தோன்றி, இடி முழக்கம் போல் உள்ள குரலில் - ''அந்த மஹாத்மா என்னுடைய கட்டளையின் பேரிலேயே உன்னிடம் வந்து என்னுடைய பழைய திருமேனியைக் கேட்டார். நீ மறுத்துவிட்டாய், நீ அவரிடம் போய் மன்னிப்புக் கோரி அவருடைய வேண்டுகோளை நிறைவேற்று. என்னுடைய ஒரு விக்ரஹம் இனி ஸ்ரீவனத்திலும் இருக்கும்'' - என்று கட்டளை இட்டார். ராஜா நடுநடுங்கிவிட்டான். அந்த இரவிலேயே மஹாத்மாவைத் தேட ஆட்களை அனுப்பினான். அவர் இருந்த இடம் தெரிந்த உடன், தானே ஸமுத்ரக் கரைக்குச் சென்று அவர் சரணத்தில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதாகவும் வாக்களித்தான்.

மஹாபிஷேகம் ஆன பின்பு, மன்னனே ஒரு பெரிய ரதத்தில் ஸ்ரீ ஜகன்னாத்ஜி, ஸ்ரீ பலராம்ஜி மற்றும் ஸ்ரீ சுபத்ராதேவியை அலங்கரித்து, தன - தான்ய ஆபரணங்களுடன் அவர்களை ப்ருந்தாவனத்திற்கு அனுப்பி வைத்தான். ஹரிதாஸரும் தன் சிஷ்யர்களுடன் கூடி ஆனந்தமாக பஜனை செய்தவாரே பல மாதங்கள் பயணித்து அவர்களுடன் ப்ருந்தாவனம் வந்தார். அவர் யமுனைக் கரையில் பஜனை செய்யும் அதே இடத்தில் அவர்களுக்கு ஒரு கோயில் அமைத்து அவர்களை அங்கே ப்ரதிஷ்டை செய்தார்.

இன்றும் யமுனைக்கரையில் உள்ள இந்தக் கோயில் மற்றும் ஸ்ரீ விக்ரஹம் அந்த இடத்தினுடைய சோபையை அதிகரிக்கின்றன. இங்கே 'ஜகன்னாத காட்' என்று ஒரு படித்துறையும் உள்ளது. பக்தர்கள் இங்கே ஸ்ரீ ஜகன்னாதரை தரிசித்து பாக்கியவான்களாக ஆகிறார்கள்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-129

*நானிலை நாடிட நானாயொன்றி நீ*
*தாணுவா நின்றனை அருணாசலா*

அருணாசலா! எனக்கே என்னிடம் உள்ள தோஷங்கள் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. இத்தனை தோஷங்கள் என்னிடம் இருக்கும்பொழுது, எனக்கு ஞானம் ஏற்படுமா என்னும் ஐயம் எனக்கு வருகின்றது. அதனால், உன்னிடம் வரலாமா, வேண்டாமா என்று எனக்குத் தோன்றுகிறது. இப்படி யோசித்து யோசித்துப் பார்த்ததில் எனக்கு ஒரு தெளிவு பிறந்தது. உன்னிடம் வாராவிடில், என்னிடம் உள்ள தோஷங்கள் சரியாக எனக்கு எந்த வழியும் இல்லை என்பதுதான் அந்தத் தெளிவு. உன்னைச் சரணாகதி செய்வதுதான் எனது முடிவு.

அதனால், என்னிடம் பல தோஷங்கள் இருப்பினும் வெட்கத்தை உதறிவிட்டு, உன்னை நாடி வந்துள்ளேன். 'நானிலை நாடிட' என்னிடம் பல தோஷம் உள்ளது என்பதால் வெட்கமுடன் உன்னை நாடாமலிருப்பது பெரும் தவறு என உணர்ந்தேன்.

'நானாயொன்றி' - பக்தி, வைராக்யங்களை உன்னிடம் யாசிப்பதே சரி என்பதால், எனது அகங்காரத்தையும், வெட்கத்தையும் தூற எறிந்துவிட்டு, நானாகவே உனது சரணத்தை வந்து ஒட்டி நிற்கிறேன். ''அப்படி நானாகவே வந்து நின்றும் கூட, ''தாணுவாய் நின்றனை''... நீ ஒன்றும் நடக்காதது போல் உள்ளாய்'' எனும் பொருள்படுகிறது. தாணு என்றால் தூண் என்றும் பொருள்படும். அஃதாவது, நான் கதறி அழுதாலும் நீ தூண் போல் அமைதியாக இருக்கிறாய் என அர்த்தம்.

வேறு ஒருவிதமாக இதை பார்ப்போம் எனில், சுவாரஸ்யமான ஒரு அர்த்தமும் அதில் தொனிக்கிறது. ஓரிடத்தில் பத்து நபர்கள் ஏதோ ஒரு காரணத்தினால், மிகவும் பயந்து இருக்கின்றனர் என

வைத்துக் கொள்வோம். இப்பொழுது, மற்றொருவர் அவர்களுடன் வந்து சேருகிறார். அவரும் பயப்படுவாரே எனில் (ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டு) முன் சொன்னவர்கள் மேலும் பயந்துவிடுவர். ஆயின், பின்னே வந்தவர் தைரியசாலியாக இருப்பின், அவர் பயப்பட மாட்டார். அப்பொழுது முன் சொன்னவர்களுக்கும் தைரியம் பிறக்கும்.

குருவிடம் வந்து சிஷ்யன் தனது கலக்கங்களை சொல்கிறான். குருவும் அவனுடன் சேர்ந்து கலங்கினால் என்னாவது? சிஷ்யன் கதி மேலும் கவலைக்கிடமாகி விடும். குரு அவனை தைரியப்படுத்தி அனுப்ப வேண்டும். அதுபோல் அருணாசலா, நான் எனது குறைகளை உன்னிடம் வந்து சொல்லி அழுவதாக இருக்க, நீயோ ஒரு தூண் போல், எதற்கும் அசையாமல், அசலமாக, அசஞ்சலமாக நின்றாய். இது எனக்கு இத்தகைய துன்பங்களைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்பது போலிருக்கிறது என்று இந்த பாடல் தொனிக்கிறது.

மற்றுமொரு வகையில், ''தாணுவா நின்றனை'' என்பது பரமேஸ்வரன் ஜோதி ஸ்வரூபமாக வானுக்கும், பூமிக்கும் தனக்கு காட்சி கொடுத்ததாக குறிப்பிடுகிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி**

ஸ்ரீ ஸாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees

# செய்திகள்

### ஸ்ரீ ஸ்வாமிஜியின் சிவகாசி விஜயம்

### நவம்பர் 3-ஆம் தேதி

சிவகாசியில், பகவான் யோகி ராம்சுரத்குமார் பேரருளினால் கடந்த 25-வருடங்களாக பகவந்நாம கீர்த்தனமே லட்சியமாகக் கொண்டு கார்னேசன் காலனியில் சத்குரு யோகி ராம்சுரத்குமார் பஜன் மண்டலியில், சத்சங்கம் நடந்து வருகின்றது.

உலக அமைதி மற்றும் நலனிற்காக ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாணைபடி மஹாமந்த்ர நாமகீர்த்தனம் கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக, அகண்டமாக காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சத்சங்கத்தில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

நவம்பர் 3-ஆம் தேதி காலை 7.30 மணி அளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிவகாசிக்கு விஜயம் செய்தார்கள். அதுசமயம், சிவகாசி, கார்னேசன் காலனியில் அமைந்துள்ள கார்னேசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்குள் பள்ளி நிர்வாகி திரு.ஞானகிரி கணேசனோடு ஏனைய ஆசிரியப் பெருமக்களும், பக்தர்களும் பூர்ண கும்பத்தோடு ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்றனர்.

கார்னேசன் பள்ளி மாணவிகள் 1990-ஆம் ஆண்டிலிருந்து காலை பிரார்த்தனையின்போது 12 முறை மஹாமந்திர நாம கீர்த்தனம் செய்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி, தம்முடைய அருளுரையில், ''எதிர்மறை எண்ணங்களை அகற்றி, ஆக்கபூர்வ எண்ணங்களைப் பெருக்குவதே மாணவிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வழி. உடலும், அறிவும் வலுப்பட, தாயும், ஆசிரியைகளும் உதவுவதைப் போல், மனவலிமைபெற ஆன்மிகம் உதவுகிறது. அதற்கு மஹாமந்திர கீர்த்தனம் செய்வதே சரியான வழியாகும். எல்லாப் பயன்களையும் அதனால் அடையலாம்'' என்று ஆசி வழங்கினார்கள்.

பின்னர் நாமகோஷத்துடன், வீதி பஜனை பக்தர்கள் கூட்டத்துடனும், பள்ளிக் குழந்தைகளுடனும் ஸ்ரீ ஸ்வாமிஜியின்

தலைமையில் பள்ளியிலிருந்து ஆரம்பித்து, முக்கிய வீதிகளின் வழியாக சத்குரு யோகிராம்சுரத்குமார் பஜன் மண்டலியில் நிறைவடைந்தது. சங்கக் கட்டிடத்தின் முன்பாக நின்றுகொண்டு சுவாமிஜி அனைத்துப் பள்ளிக் குழந்தைகளையும் ஆசிர்வதித்தார்கள். கலந்து கொண்டவர்கள் 1500 பேர்களுக்கு மேல் இருந்தார்கள்.

சத்சங்கத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி நாமகீர்த்தனம் செய்து அருளுரை வழங்கினார்கள். ''மஹாமந்திர கீர்த்தனம் சாதி, மத, இன வேறுபாடின்றி உலகம் முழுவதும் ஒலிக்கவேண்டும். இது ஒன்றே இந்த கலிகாலத்தில் நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரே வழி'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி ஆணித்தரமாக வலியுறுத்தினார்கள்.

''திருமண வைபவங்கள், இறுதிச் சடங்குகள் போன்ற நிகழ்ச்சிகளில் பஜனை மண்டலியைச் சேர்ந்தவர்கள் சென்று ஒரு மணிநேரம் மஹாமந்திர கீர்த்தனம் செய்வது பெரிய நன்மையை கொடுக்கும்'' என்றும் உபதேசித்தார்கள்.

திருமதி. உமா சுரேந்திரன், திருமதி வாசுகி ஜெயராஜ் மற்றும் சிவகாசி பக்தர்கள், ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தனர். பின்னர், ஸ்ரீ ஸ்வாமிஜி பக்தர்களின் இல்லங்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தார்கள்.

### ஸ்ரீ ஸ்வாமிஜியின் தூத்துக்குடி விஜயம்

### நவம்பர் 17 ஆம் தேதியன்று

மாலை 7.30 மணிக்கு நாமமுத்து நகராம், தூத்துக்குடியில், சிவன் கோவில் முன்பாக நடைபெற்ற நாம ஸங்கீர்த்தன நகர்வல வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். சுமார் 800க்கும் மேற்பட்ட திரளான பக்தர்கள் கலந்துகொண்டார்கள். அதன்பின் சிவன் கோவில் வளாகத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். இரவு தூத்துக்குடி விவேகானந்தா கேந்திராவிற்கு விஜயம் செய்தார்கள்.

### நவம்பர் 18-ஆம் தேதியன்று

மாலை 6 மணியளவில் தூத்துக்குடி கேந்த்ரா ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி இல்லத்தில் நடைபெற்ற நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டார்கள். 9 மணி வரை ஸ்ரீமத் பாகவதத்தைப்பற்றி அருளுரை ஆற்றினார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

## நவம்பர் 19-ஆம் தேதியன்று

காலை 11.30 மணி முதல் 1 மணி வரை தூத்துக்குடி கேந்த்ரா ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி இல்லத்தில் ஸ்ரீமத் பாகவதம் பற்றி அருளுரை வழங்கினார்கள். தூத்துக்குடி சிவன் கோவில் அருகேயுள்ள தூத்துக்குடி நகராட்சி மண்டபத்தில் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை, ''மக்கள் நலனுக்காக நடைபெற்ற மஹாமந்திர பிரார்த்தனைக் கூட்டத்தில்'' ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

சுமார் 1000 பக்தர்கள் கலந்துகொண்டார்கள். பின்பு, பக்தர்கள் நாம மஹிமையால் ஏற்பட்ட அவர்களது அனுபவங்களைப் பற்றிக் கூறினார்கள். அதன்பின் பிரார்த்தனையின் மஹிமை பற்றி ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். அதன்பின் மஹாமந்திர நாமகீர்த்தன பிரார்த்தனை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டவர்கள் எல்லோரும் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தனர். அதன்பின் ஸ்ரீ ஸ்வாமிஜி, பக்தர்கள் அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கி ஆனந்தப்படுத்தினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின் தூத்துக்குடி விஜயத்திற்கு திரு. கதிரேசன் அவர்கள் தலைமையில் தூத்துக்குடி நாம பிக்ஷா கேந்திரா பக்தர்கள் அனைவரும் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

**சேரன் மகாதேவியில்** காலை 7.00 மணி முதல் 9.30 மணி வரை மஹாமந்திர நகர ஸங்கீர்த்தனம் ஸ்ரீ ராமசாமி கோயிலில் இருந்து புறப்பட்டு பல வீதிகள் வழியாக செல்ல, 100க்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ள, விமர்சையாக நடைப்பெற்றது. இதில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியும் நடுவிலே கலந்துகொண்டு அருளியது கலந்து கொண்டோரின் உற்சாகத்தை பன்மடங்காக பெருக்கியது. கலந்து கொண்ட எல்லா வீதிகளிலும் உள்ள வீட்டில் உள்ளோர் அனைவரையும் நாமஸங்கீர்த்தனம் ஈர்த்தது என்பது வியப்பொன்றும் இல்லை. அவ்வூரே அன்று காலை நாமஸங்கீர்த்தனத்தில் மூழ்கி இருந்தது. நகர்வல ஸங்கீர்த்தனத்தின் முடிவில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி நாம ப்ரபாவத்தைப் பற்றி ஸ்ரீ ராமசாமி கோயிலில் உள்ள ஆஞ்சநேயர் ஸன்னிதியில் அருளுரை ஆற்றினார்கள். சேரன்மகாதேவி நாம பக்த சபா அன்பர்கள், அம்பை ரமணன் மற்றும் விக்கரமசிங்கபுரம் முருகேசன் மற்றும் பல பக்தர்கள் சேர்ந்து நகர ஸங்கீர்த்தனத்திற்காக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# நாமஸங்கீர்த்தன ஸத்சங்க செய்திகள்

## அக்டோபர் 24-ஆம் தேதி

செய்யார் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் செய்யார் R. வெங்கட்ராம பாகவதர் இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜெயந்தியை ஒட்டி காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட ''ஹரே ராம....'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. இதில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## அக்டோபர் 29-ஆம் தேதி

தேனி மாவட்டம், பெரியகுளத்தில், அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாம ஸங்கீர்த்தன பேரவை சார்பில் ஹரே ராம R. க்ருஷ்ணகுமார் மற்றும் M. காசியம்மாள் அவர்களால் ஏற்பட்டு செய்யப்பட்டு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ M.K. ராமானுஜம் நாம மஹிமையைப் பற்றி பேசினார்கள். பின்னர் நகர முக்கிய வீதிகளின் வழியாக நகர ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. கலந்துகொணடவர் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## நவம்பர் 12-ஆம் தேதி

சேலத்தில் உள்ள ஸ்ரீ ராமக்ருஷ்ணா மடத்தில் சைதன்ய மஹா ப்ரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பில் மஹாமந்திர நாம ஸங்கீர்த்தனம் மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை பக்தி பூர்வமாக நடைபெற்றது. இதில், நம் ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன், பகவான் ராமக்ருஷ்ணர் நாம ஸங்கீர்த்தனத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு நாம ஸங்கீர்த்தனம் செய்தனர்.

### நவம்பர் 16-ஆம் தேதி

பெரியகுளம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் பேரவை சார்பில் 'ஹரே ராம' R. க்ருஷ்ணகுமார் அவர்களால் ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் அகண்ட 'ஹரே ராம'... நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதில் திரளான பள்ளி குழந்தைகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### நவம்பர் 19-ஆம் தேதி

சேலம் சின்னகடை வீதி, ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி தேவஸ்தான திருக்கோயிலில் ஆரம்பித்து ''ஹரே ராம...'' நகர ஸங்கீர்த்தனம், ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருவுருவபடத்துடன், மாலை 5 மணி முதல் மாலை 6.30 மணி வரை சேலம் முக்கிய தெருக்கள் வழியாக சென்று ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி திருக்கோயிலில் நிறைவடைந்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நமது ஸங்ஸங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ S.P. சேஷாத்ரி, வேணுகோபால ஸ்வாமி திருக்கோயிலில் நவம்பர் 17, 18, 19 தேதிகளில் நாம மஹிமைப் பற்றி ப்ரவசனம் செய்தார்கள். பக்தர்கள் பெருமளவில் கலந்துகொண்டார்கள். சேலம் பக்தர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### நவம்பர் 19-ஆம் தேதி

தொழுதூர் அருகில் உள்ள மங்களூர் கிராமத்தில் ''ஹரே ராம'' நகர ஸங்கீர்த்தனம் காலை 7 மணி முதல் காலை 9 மணி வரை நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மங்களூர், மலையனூர், சிறுபாக்கம், லெக்கூர், எழுதூர் கிராமத்து மக்களும் இணைந்துகொண்டு நாமகீர்த்தனம் செய்தனர். நகர ஸங்கீர்த்தனம், ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோவிலில் தொடங்கி கிராமத்தின் முக்கிய வீதிகளில் வலம் வந்து அதே கோவிலில் முடிந்தது. மங்களூர் முருகதாஸ் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தர். இதில் நமது சத்சங்கத்தைச் சேர்ந்த வசந்தராஜன் மற்றும் தியாகராஜன் கலந்துகொண்டு நாம மஹிமை பற்றி பேசினர்.

மங்களூர் அருகில் உள்ள மலையனூரில் காலை 11 மணி முதல் 12 மணி வரை நடைபெற்ற ''ஹரே ராம...'' நகர ஸங்கீர்த்தனத்தில் 50க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர். சிறார்களும் பங்குகொண்டு 'ஹரே ராம' மந்த்ரம் சொன்னது ஆனந்தமாக இருந்தது. இந்த நிகழ்ச்சி பிள்ளையார் கோவிலில் தொடங்கி, கிராமத்து வீதிகளின் வழியாக ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி கோவிலில் நிறைவுற்றது.

### நவம்பர் 25-ஆம் தேதி

பெரியகுளம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாம ஸங்கீர்த்தன பேரவை சார்பில் ஹரே ராம R. கிருஷ்ணகுமார் அவர்களால் நகர ஸங்கீர்த்தனம் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள அரண்மனையில் ஆரம்பித்து வடகரை வரை வீதிகளின் வழியாக நடைபெற்றது.

### நவம்பர் 26-ஆம் தேதி

பெரியகுளம் அருகில் உள்ள வடுகப்பட்டியில் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோவிலில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 'ஹரே ராம...' அகண்ட நாம கீர்த்தனம் பெரியகுளம், ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாமஸங்கீர்த்தன பேரவை சார்பில், ஹரே ராம R. கிருஷ்ணகுமார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைப்பெற்றது. இதில் 800க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர். நகர சங்கீர்த்தனம் காலையிலும் மாலையிலும் நடைபெற்றது. இதில் அருகிலுள்ள பள்ளி குழந்தைகளும் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியளவில் நகர ஸங்கீர்த்தனம் மேல் மங்கலத்திலிருந்து கிளம்பி வடுகபட்டி ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் பகல் 12 மணிக்கு நிறைவடைந்தது. மாலையில் நகர ஸங்கீர்த்தனம் வடுகப்பட்டி முக்கிய வீதிகளில் நடைபெற்றது. நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த S.P. சேஷாத்ரி, ஹரேராம், ராமகிருஷ்ணஹரி கலந்துகொண்டனர். S.P. சேஷாத்ரி அவர்கள் நாம மஹிமைப் பற்றி பேசினார்.

ஸ்ரீ ஹரி:

## சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா

நெ. 51, 7வது அவென்யு, அசோக் நகர், சென்னை - 600 083. ✆ : 044-24895875

# 2007 புத்தாண்டு மஹா மந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாசியுடன், உலக அமைதி வேண்டியும், 2007 புத்தாண்டில், எல்லோருக்கும் எல்லாவிதமான நன்மைகளும் ஏற்படவும், ''ஹரே ராம....'' மஹா மந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில், அகண்ட

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!''**

மஹாமந்த்ர நாமகீர்த்தன கூட்டு ப்ரார்த்தனை 1-1-2007 அன்று காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை, **காமராஜர் அரங்கம், Old No. 574A, New No. 492, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னையில்** நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அனைவரும் கலந்துகொண்டு ஸகல நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹ மஹோத்ஸவம்

இடம் : SREEJA LODGE, WEST NADA, GURUVAYOOR
தேதி : 14-1-2007 முதல் 21-1-2007 வரை
14-1-2007 : மாஹாத்மியம்

**ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம் நடைபெறும்.**

குறிப்பு : 1. கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள், அவரவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் பயண வசதியையும், தங்கும் வசதியையும் செய்துகொள்ள வேண்டும்.
2. ஆகார வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writting from the publisher of Madhura Murali.*